**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 290 நாள்: 14.07.2026

**அண்ணாநகர் மற்றும் திரு.வி.க. நகர் மண்டலங்களில்நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (14.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், அண்ணாநகர் மண்டலம், வார்டு-104க்குட்பட்ட வி.ஆர்.மால் அருகில் திறந்தவெளி இடம், வார்டு-103க்குட்பட்ட அண்ணாநகர் 2ஆவது அவென்யூவில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி, வார்டு-102க்குட்பட்ட செனாய் நகர் வணிக வளாகம், வார்டு-101க்குட்பட்ட செனாய் நகர், சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-69க்குட்பட்ட சோமையா தெருவில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுமானப் பணி, ஜவஹர் நகர் 6ஆவது பிரதான சாலையில் போக்குவரத்து தீவுத்திட்டு மேம்பாட்டுப் பணி, ஜவஹர் நகர் 5ஆவது பிரதான சாலையில் அமைக்கப்பட்டு வரும் நீர்உறிஞ்சும் பூங்கா, வார்டு-67க்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், ஜி.கே.எம்.காலனி மயானபூமியில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் மரக்கன்றினை நட்டார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**